பக்கங்கள் 16+3

# மாலை முரசு



முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | ஆனி 09 திங்கட்கிழமை 23.06.2025 | அதிர்வு 324

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



### மனிதப் புதைகுழிக்குச் சர்வதேச நீதி கோரி

# செம்மணி மண்ணில் இன்று ஏற்றப்பட்டது 'அணையா விளக்கு'

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழிக்குச் சர்வதேச நீதி கோரி 'அணையா விளக்கு' தொடர் போராட்டம் இன்று ஆரம்பமானது.

செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைக்குழிக்குச் சர்வதேச நீதி கோரி மக்கள் செயல் அமைப்பின் ஏற்பாட்டில் 'அணையா விளக்கு' எனும் மூன்று நாட்கள் தொடர் போராட்டம் யாழ். நல்லூர் வளைவுக்கு அருகில் இன்று ஆரம்பமானது.

02▶





# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**செம்மணி மண்ணில்...**

செம்மணியில் படுகொலை செய்யப்பட்ட கிருஷாந்தியின் உறவினர், மதத் தலைவர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் இணைந்து இன்று முற்பகல் 10.10 மணியளவில் அணையா விளக்கை ஏற்றிப் போராட்டத்தை ஆரம்பித்து வைத்தனர்.

அதன்பின்னர் செம்மணியில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளுக்காக மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது

தொடர்ச்சியாக 3 நாட்களுக்கு சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டமும் முன்னெடுக்கப்படுகின்றது.

இன்றைய ஆரம்ப நிகழ்வில் யாழ். மாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார், சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் மற்றும் சர்வமதத் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், அர்ச்சுனா இராமநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான வீ.ஆனந்தசங்கரி, செல்வராசா கஜேந்திரன், முன்னாள் யாழ். மாநகர சபையின் மேயர் வி.மணிவண்ணனன், மக்கள் செயல் அமைப்பின் பிரதிநிதிகள், சட்டத்தரணிகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தினர், பல்கலைக் கழக மாணவர்கள், அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையர் வோல்கர் டர்க் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ள வுள்ள நாளன்று மகஜர் ஒன்றும் கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


















# திருகோணமலை மாநகர சபை ஆட்சி அதிகாரம் தமிழரசு வசம்

## மேயராகக் கந்தசாமி செல்வராஜா தெரிவு

(எஸ்.கீதபொன்கலன், ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாநகர சபையின் ஆட்சி அதிகாரத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றியுள்ளது. மேயராகக் கந்தசாமி செல்வராஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை நகர சபையானது மாநகரசபையாக தரமுயர்தப்பட்டு முதலாவது சபை அமர்வு இன்று பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமானது.

இந்த அமர்வுக்குக் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமை தாங்கினார்.

மாநகர மேயரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு கட்சியும் அதற்குறிய 50 வீதம் கோரத்தைக் கொண்டிருக்காத நிலையில் மேயர் தெரிவு இடம்பெற்றது.

இலங்கைத் தமிழசுக் கட்சியின் சார்பில் கந்தசாமி செல்வராஜாவும், தேசிய மக்கள் சக்தியின் சார்பில் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் பதுகே தனுஸ்க ஜெயலத் மேயர் தெரிவுக்குப் போட்டியிட்டனர்.

சபையில் இருந்த 25 உறுப்பினர்களும் பகிரங்க வாக்கெடுப்புக்குக் கோரியதனால் பகிரங்க வாக்கெடுப்பு இடம்பெற்றது.

வாக்கெடுப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் கந்தசாமி செல்வராஜா 19 வாக்குகளையும், தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் பதுகே தனுஸ்க ஜெயலத் 6 வாக்குகளையும் பெற்றனர்.

அதனடிப்படையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் கந்தசாமி செல்வராஜா திருகோணமலை மாநகர சபையின் முதலாவது மேயராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இதையடுத்துத் துணை மேயராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் முகமட் மௌசூம் சபையில் ஏகமானதாகத் தெரிவு செய்யப்பட்டார்.











### திருவுளச்சீட்டு முறை மூலம்

# சாவகச்சேரி பிரதேச சபையை கைப்பற்றியது தமிழரசுக் கட்சி

## தவிசாளராகப் பொன்னையா குகதாசன் தெரிவு

**(பிரபாகரன் டிலக்சன்)**

யாழ். சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளராகத் திருவுளச்சீட்டு முறை மூலம் இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த பொன்னையா குகதாசன் தெரிவானார்.

சாவக்கேச்சேரி பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்று பிரதேச சபை சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி. தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

28 உறுப்பினர்களைக் கொண்ட சாவகச்சேரி பிரதேச சபைக்காக நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 8 ஆசனங்களையும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் 7 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 6 ஆசனங்களையும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி 5 ஆசனங்களையும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் தமிழ் மக்கள் கூட்டணி தலா ஓர் ஆசனத்தையும் கைப்பற்றியிருந்தன.

இந்நிலையில் சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளர் தெரிவில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பாக பொன்னையா குகதாசன் முன்மொழியப்பட்டார். ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் செல்வரத்தினம் மயூரன் முன்மொழியப்பட்டார்.

28 உறுப்பினர்களைக் கொண்ட சாவகச்சேரி பிரதேச சபையில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் வாக்களிப்பில் கலந்துகொள்ள நீதிமன்றம் தடை உத்தரவு விதித்திருந்தது. இதனால் 27 உறுப்பினர்களிடத்தில் மாத்திரம் வாக்கெடுப்பு இடம்பெற்றது.

தவிசாளர் பதவிக்காக இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட பொன்னையா குகதாசன், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் போட்டியிட்ட செல்வரத்தினம் மயூரன் ஆகியோர் தலா 10 வாக்குகளையும் பெற்றனர். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் ஓர் உறுப்பினர் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் 6 உறுப்பினர்கள் என மொத்தமாக 7 உறுப்பினர்கள் நடுநிலை வகித்தனர்.

திருவுளச்சீட்டின் பிரகாரம் இடம்பெற்ற தவிசாளர் தெரிவில் இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த பொன்னையா குகதாசன் தெரிவானார்.

உப தவிசாளராக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட இராமநாதன் யோகேஸ்வரன் தெரிவானார்.







# கிளி. பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளராக சுரேன் ஏகமனதாகத் தெரிவு

## தமிழரசுக்கு எதிராக எந்தக் கட்சியும் போட்டியிடவில்லை




கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளராகச் சுப்பிரமணியம் சுரேன் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பிரதேச சபையின் தவிசாளர் தெரிவு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி. தேவந்தினி பாபு தலைமையில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை சபை மண்டபத்தில் இன்று நடைபெற்றது.

இதன்போது தவிசாளர் தெரிவுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் சுப்பிரமணியம் சுரேனின் பெயர் பரிந்துரைக்கப்பட்டபோது ஏனைய கட்சிகளில் இருந்து எவரின் பெயரும் பரிந்துரைக்கப்படவில்லை. இந்நிலையில், சுப்பிரமணியம் சுரேன் தவிசாளராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். உப தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த சிவகுரு செல்வராசா தெரிவு செய்யப்பட்டார்.

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பாக 6 உறுப்பினர்களும், தேசிய மக்கள் சக்தி சார்பாக 3 உறுப்பினர்களும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பாக 3 உறுப்பினர்களும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பாக ஓர் உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மூதூர் பிரதேச சபையை கைப்பற்றியது தமிழரசு!

## நான்கு தசாப்தங்களுக்குப் பின்னர் தமிழர் ஒருவர் தவிசாளராகத் தெரிவு

(எச்.ஏ. ஹலீம்)

திருகோணமலை, மூதூர் பிரதேச சபையை இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றியுள்ளது.

மூதூர் பிரதேச சபையின் தவிசாளர் தெரிவு இன்று பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் இடம்பெற்ற தவிசாளர் தெரிவில், இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த செல்வரத்தினம் பிரகலாதன் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் .

கடந்த நான்கு தசாப்தங்களுக்குப் பின்னர் தமிழர் ஒருவர் மூதூர் பிரதேச சபையின் தவிசாளராக இம்முறை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்றைய தவிசாளர் தெரிவில் சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 22 உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். இவர்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் 5 பேர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில்



4 பேர், தேசிய மக்கள் சக்தி சார்பில் 3 பேர், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் 3 பேர், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் 2 பேர், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் 2 பேர், தேசிய காங்கிரஸ் சார்பில் ஒருவர், நல்லாட்சிக்கான தேசிய முன்னணி சார்பில் ஒருவர், சுயேச்சைக் குழு சார்பில் ஒருவர் என அங்கம் வகிக்கின்றனர்.

தவிசாளர் தெரிவில் இருவர் போட்டியிட்டனர். இதில் இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த செ.பிரகாலதனும், ஐக்கிய மக்கள் சக்தி கட்சியைச் சேர்ந்த எம்.றிபானும் போட்டியிட்டனர்.

பகிரங்க வாக்கெடுப்பின் மூலம் இலங்கைத் தமிழரசுக் கட்சி சபையைக் கைப்பற்றியது.

உப தவிசாளராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பி.டி.எம். பைசர் தெரிவு செய்யப்பட்டார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சந்திக்க முன் செய்ய வேண்டியது

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வொல்கர் ட்ர்க் இன்று நான்கு நாள் பயணமாகக் கொழும்பு வந்து சேரவிருக்கையில், அவரைச் சந்திப்பதற்கான வாய்ப்புத் தங்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று யுத்தக் குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகி இருக்கும் இலங்கை இராணுவத்தின் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் கோரிக்கை முன் வைத்திருக்கிறார்கள்.

ஓய்வு பெற்ற படை அதிகாரிகள் பலருக்கு எதிராக அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து போன்ற நாடுகள் பல்வேறு தடைகளை விதித்துள்ள பின்புலத்தில் இந்தச் சந்திப்புக்கான கோரிக்கை விடுக்கப்பட்டு இருக்கின்றது.

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் இழைக்கப்பட்டதான குற்றச்சாட்டுகள் இலங்கைக்கும் அதன் படைகளுக்கும் எதிராக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டங்களில் தீர்மானங்கள் மூலம் சுமத்தப்பட்டு இருக்கின்ற நிலையில், அந்த யுத்தக் குற்றங்களுக்குக் காரணமான இராணுவத்தின் அதிகாரிகளாகப் பணியாற்றியவர்களே இப்போது இந்தக் கோரிக்கையை முன் வைத்திருக்கிறார்கள்.

முன்னாள் மூத்த ராணுவ அதிகாரிகளான ஜெனரல் சவேந்திர சில்வா, ஜென்ரல் ஜெகத் ஜெயசூரிய, அட்மிரல் ஒவ் தி பிளீட் வசந்த கரணங்கொட மற்றும் மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ போன்றோருக்கு எதிராக இந்தத் தடைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் மோசமான குற்றங்கள் தொடர்பான ஆவணங்கள், ஆதாரங்கள், சாட்சியங்கள், சான்றுகளைப் பதிந்து சேமிக்கும் நடவடிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகம் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேல் துரிதமாக முன்னெடுத்து வருகையில், அச்சமயத்தில் படையில் பணியாற்றிய அதிகாரிகளுக்கு எதிராக அந்தக் குற்றச்சாட்டுக்கள் விஸ்வரூபம் எடுக்கலாம் என்ற கருத்தியல் நிலவுகையில் இந்தச் சந்திப்புக்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டு இருக்கின்றது.

பிரச்சினையில் நேரடியாக சம்பந்தப்பட்ட ஒரு தரப்பை, இவ்விடயத்தில் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் பெற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பில் இருக்கும் சர்வதேச அலுவலர் ஒருவர் சந்திப்பது தவறல்ல. விடயங்களை கலந்துரையாடுவது பிழை அல்ல.

இராணுவ அதிகாரிகளின் இன்றைய இக்கட்டு நிலைக்கு பிரதான காரணம் யுத்தத்தின் இறுதி கட்டத்தில் இடம்பெற்ற குற்றங்கள், தவறுகள், அட்டூழியங்கள், அடாவடித்தனங்கள், அத்துமீறல்கள் குறித்து சர்வதேச நியமங்களுக்கு அமைவான - நீதி, நியாயமான - விசாரணைகள் நடத்துவதற்கு இலங்கைத் தரப்பு எதிர்த்து, ஒத்துழைக்க மறுத்து நிற்பதுதான் என்பது வெளிப்படையானது.

இராணுவ அதிகாரிகள் தங்கள் தரப்பில் நியாயம் இருப்பதாகவும், தங்களுக்கு அநியாயம் இழைக்கப்பட்டு இருப்பதாகவும் கருதினால், அதே போன்ற கருத்தை பாதிக்கப்பட்ட தமிழ் மக்களும் முன்வைக்கின்ற பின்னணியில், அவை பற்றி தீர்மானகரமான முடிவு எடுப்பதற்காக சர்வதேச நியமங்களுக்கு அமைவாக அந்த விடயங்கள் விசாரணை செய்யப்பட வேண்டும் என்ற இணக்கத்தோடு, அது பற்றிய பகிரங்க அறிவித்தலோடு, மனித உரிமைகள் ஆணையாளரை சந்திக்க முயல்வதுதான் நியாயமானதாக இருக்கும்.

நடந்து முடிந்த பெரும் அக்கிரமங்களை இலங்கை அரசோடு சேர்த்து மூடி மறைத்து, நீதி - நியாயமான விசாரணைகளுக்கான வாசல்களை அடித்து மூடி, பொறுப்புக் கூறலை நிராகரித்து, அடாவடித்தனம் பண்ணிக்கொண்டு, ஐ.நா. மனித உரிமை ஆணையாளரைச் சந்திக்க முயல்வதில் அர்த்தம் இல்லை என்பதை சம்பந்தப்பட்ட படை அதிகாரிகளுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.




# காணி உரிமையைப் பெற்றுக்கொடுக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும்!

## மலையக மக்களின் காணி உரிமைக்கான இயக்கம் கோரிக்கை

**(பொகவந்தலாவ எஸ் சதீஸ்)**

ஏனைய அரசாங்கத்தை போல் ஏமாற்றாமல் காணி உரிமையைப் பெற்றுக்கொடுக்க ஜனாதிபதி அநுர குமார திஷாநாயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் .

காணி தினத்தில் மலையக மக்களின் காணி உரிமைக்கான இயக்கம் இவ்வாறு கோரிக்கை.

இந்தக் கோரிக்கையை முன் வைத்து மலையக மக்களின் காணி உரிமைக்கான இயக்கம் சனிக்கிழமை காணி தினத்தில் ஹட்டன் மல்லியப்பு சந்தியில் ஆர்ப்பாட்டம் ஒன்றையும் முன்னெடுத்தது.

ஹட்டன் மல்லியப்பு சந்தியில் இருந்து ஹட்டன் மணி கூட்டு கோபுரம் வரை இடம் பெற்ற ஆர்ப்பாட்டப் பேரணி பறையிசையோடு முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது 200 வருட காலமாக உழைத்து ஓடாய் தேய்ந்து போன மலையக மக்களுக்கு காணி உரிமையினை வழங்க எந்த அரசும் இதுவரை முன்வரவில்லை. எமது மக்களுக்கு காணி உரிமை கட்டாயம் வழங்கப்பட வேண்டும். அவ்வாறு காணி வழங்கப்படும் போது வாழ்வாதாரத்தோடு வீடமைப்புத் திட்டத்தை மேற்கொள்ள முடியும்.

அப்போதுதான் பெண்கள் சுதந்திரமாக வாழ்வதோடு சிறுவர்களின் கல்வி நடவடிக்கையையும் முறையாக முன்னெடுத்து செல்ல கூடியதாக இருக்கும். தற்போது உள்ள வீடமைப்புத் திட்டங்கள் பொருத்தமற்றதாகக் காணப்படுகின்றன.

தேசிய நீரோட்டத்தில் உள்ள சட்டத் திட்டங்களின் அடிப்படையில் மலையக மக்களுக்கு 20 பேர்ச் காணியை இந்த தேசிய மக்கள் சக்தி அரசு பெற்றுக் கொடுக்கம் என்று நம்புகிறோம்.

மலையக மக்கள் தேசிய வருமானத்துக்காக இன்னமும் உழைத்து கொண்டு இருக்கிறார்கள். ஆனால் இந்த மக்களுக்கான காணி உரிமை உறுதிபடுத்தப்படவில்லை. மலையக மக்கள் நாட்டுக்கு உழைத்தது மட்டும் தான்.

காணி உரிமை இல்லாத காரணத்தால் உண்மையான பிரஜைகளாகக் ஏற்றுக்கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

மாறி மாறி ஆட்சி பீடத்துக்கு அரசுகள் வந்தாலும் எமக்கு வாக்குறுதி அழித்தாலும் நாங்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்ட நிலையில் இருக்கிறோம். காணி உரிமையைப் பெற்றுக்கொடுப்பார்கள் என நம்பி வாக்களித்திருந்தோம். ஆனால் தற்போது உள்ள செயற்பாடுகளை பார்க்கின்ற போது இந்தக் காணி உரிமையை இவர்களும் பெற்று தருவார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் இந்தக் காணி தொடர்பான எவ்வித கலந்துரையாடல்களும் இடம் பெறவில்லை என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சுற்றிகாட்டினர.

சொந்த நிலம் எமக்கு வேண்டும், உணவு உற்பத்திக்கான காணியை வழங்கு, காணி தினத்தை தேசிய தினமாக பிரகடனப்படுத்து போன்ற சுலோகங்களையும் கோஷங்களையும் எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.



# சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக்கல்வி புதிய நிர்வாக தெரிவும் மரநடுகை விழாவும்

(எஸ். நிதர்ஷன்)

சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக்கல்வி பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் புதிய நிர்வாக தெரிவும் மரநடுகை விழாவும் சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக்கல்வி நிலையத்தில் இடம்பெற்றன.



சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக்கல்வி பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் வருடாந்த நிர்வாக தெரிவில் தலைவராக ச பிரசாந், செயலாளர் கோ.பவியா, பொருளாளர் கு.சுலக்சனா, உபதலைவர் சொ. திவாகர், உபசெயலாளர் பு.கிந்துஷா, உள்ளூர் ஆலோசகர் அ.சிவானந்தன் புலம்பெயர்தேச ஆலோசகர் கி.சிவசுந்தரம்(சுவிஸ்), த.தேவகுமார்(பிரான்ஸ்), து.சுதர்சன்(லண்டன்), கணக்காய்வாளர் கி.சுபகரன் ஆகியோரும் ஏனைய உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இதனை தொடர்ந்து கலைமகள் இலவசக் கல்வி பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் சம்பிரதாய பூர்வ மரடுகையும், பூமரகன்றுகள் விநியோகமும் கலைமகள் இலவசக் கல்வி நிலையத்தில் இடம்பெற்றன.

இதன் பொழுது ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், கலைமகள் இலவசக்கல்வி நிலைய மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.






# சுழிபுரத்தில் சாதனையாளர் கௌரவிப்பு!

**(எஸ். நிதர்ஷன்)**

சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டு கழகத்தால் சாதனையாளர் கௌரவிப்பு கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதன்போது கழகத்தின் தலைவராக இருந்து வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்ட சண்முகநாதன் ஜெயந்தன் கழகத்தினரால் கௌரவிக்கப்பட்டார்.

இதேவேளை, தேசிய மட்டத்தில் வேக நடைப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்ற ஜீலேஸ்வரன் தமிழரசி மற்றும் அவரின் பெற்றோர்களுக்கும் கௌரவிப்பு இடம்பெற்றது.





# புத்தளத்தில் சர்வதேச யோகா தின நிகழ்வு!

**(உடப்பு க.மகாதேவன்)**

சர்வதேச யோகா தின நிகழ்வுகள் புத்தளத்தில் உடப்பு இந்து கலாசார மண்டபத்தில் இடம்பெற்றன.

உடப்பூர் இந்து நெறிக்கழகம், உடப்பு ஸ்ரீ கோகுலம் அறநெறிப் பாடசாலையும் இணைந்து இந்த யோகா நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன. உடப்பு இந்து நெறிக்கழகத்தின் தலைவர் சிவத்திரு பா.முருகானந்தன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது யோகா தின பதாதை தாங்கிய வண்ணம் மாணவர்களின் வீதி ஊர்வலம் இடம்பெற்றது.



பின்னர் யோகாசனப் பயிற்சியை சிவத்திரு பா.முருகானந்தன் ஆரம்பித்து வைத்தார். இதில் பல மாணவர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.




# உடப்பு இந்து பொது மயானத்தை திருத்தம் செய்த பிரதேச சபை உறுப்பினர்





(உடப்பு க.மகாதேவன்)

உடப்பு இந்து பொது மயானம் தூய்மைப் படுத்தும் நிகழ்வு சனிக் கிழமை (21) இடம்பெற்றது.

இதில் ஆராச்சிக்கட்டு பிரதேச சபையின் உடப்பு வட்டாரப் பகுதியில் போட்டியிட்ட பிரதேச சபை உறுப்பினர் என் கமலேஸ்வரன் கலந்து கொண்டு இந்தப் பணியில் ஈடுபட்டார்.







# போரின் தீவிரத்தை குறைத்து பேச்சில் ஈடுபட வேண்டும்

## ஈரான் ஜனாதிபதியிடம் பிரதமர் மோடி வலியுறுத்தல்

ஈரான் ஜனாதிபதி மசூத் பெஷஷ்கியன் உடன் தொலைபேசியில் உரையாடிய இந்திய பிரதமர் நரேந்திர மோடி, போரின் தீவிரத்தைக் குறைத்து பேச்சுவார்த்தையில் ஈடுபட வலியுறுத்தியுள்ளார்.

ஈரான் - இஸ்ரேல் இடையே போர் நடைபெற்று வந்த நிலையில், நேற்று திடீரென அமெரிக்கா ஈரான் மீது தாக்குதல் நடத்தியதால், போர் பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது.

இந்நிலையில், பிராந்தியத்தில் நிலவும் சூழ்நிலை குறித்து பிரதமர் நரேந்திர மோடி, ஈரான் ஜனாதிபதியுடன் தொலைபேசியில் உரையாடியுள்ளார். அப்போது, சமீபத்திய பதற்றங்கள் குறித்து பிரதமர் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தை மற்றும் இராஜதந்திரத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய நரேந்திர மோடி, நீண்டகால பிராந்திய அமைதி, பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மையை உறுதி செய்வதற்கு போரின் தீவிரத்தை குறைப்பது அவசியம் என்பதை மீண்டும் வலியுறுத்தினார்.

இதுகுறித்து எக்ஸ் தளத்தில் பிரதமர் மோடி வெளியிட்டுள்ள பதிவில், "ஈரான் ஜனாதிபதி மசூத் பெஷஷ்கியனுடன் பேசினேன். தற்போதைய நிலைமை குறித்து விரிவாக விவாதித்தோம். சமீபத்திய மோதல்கள் குறித்து ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தினேன். பிராந்திய அமைதி, பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மையை விரைவாக மீட்டெடுப்பதற்கும், நிலைமையில் முன்னேற்றத்தை ஏற்படுத்தவும், உடனடியாக போரின் தீவிரத்தைக் குறைத்து, பேச்சுவார்த்தை மற்றும் இராஜதந்திர ரீதியிலான தீர்வுக்கான அழைப்பை மீண்டும் வலியுறுத்தினேன்." என தெரிவித்துள்ளார்.



# ஈரானிலிருந்து 'ஒபரேஷன் சிந்து' மூலம் 1,428 இந்தியர்கள் தாயகம் திரும்பினர்

ஈரானிலிருந்து 1,428 இந்தியர்கள் தாயகம் திரும்பினர். மேலும் 800 பேர் நாடு திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேல், ஈரான் இடையே கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக போர் நடைபெற்று வருகிறது. இதையடுத்து, ஒபரேஷன் சிந்து திட்டத்தின் மூலம் ஈரானில் உள்ள இந்தியர்கள் அழைத்து வரப்படுகின்றனர்.

இதற்கான ஏற்பாடுகளை ஈரானில் உள்ள இந்திய தூதரகமும் மத்திய வெளியுறவு அமைச்சகமும் செய்து வருகிறது. இதுவரை 4 தனி விமானங்களில் மாணவர்கள் உட்பட 1,100 பேர் தாயகம் திரும்பி உள்ளனர்.

இந்நிலையில், 300 இற்கும் மேற்பட்டவர்களுடன் 5 ஆவது விமானம் நேற்று மாலை டில்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம் வந்தடைந்தது.

இதன்மூலம் இதுவரை ஈரானிலிருந்து அழைத்து வரப்பட்டவர்கள் எண்ணிக்கை 1,428 ஆக அதிகரித்துள்ளது. மேலும் 800 பேர் நாடு திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர். அவர்கள் இன்றும் நாளையும் தாயகம் திரும்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுதவிர, நேபாளம் மற்றும் இலங்கையைச் சேர்ந்தவர்களையும் ஈரானிலிருந்து அழைத்துவர தேவையான உதவிகள் செய்யப்படும் என இந்திய அரசு தெரிவித்துள்ளது.



## ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் விவகாரம்:

# இந்திய அரசு பொறுப்பை உணர்ந்து செயல்பட சோனியா வலியுறுத்தல்

ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வரும் விவகாரத்தில் இந்திய அரசு தனது பொறுப்பை உணர்ந்து செயல்படவேண்டும் என காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியா காந்தி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

“காசாவில் ஏற்பட்ட பேரழிவு குறித்தும், தற்போது ஈரானுக்கு எதிரான இஸ்ரேலின் தாக்குதல் குறித்தும் இந்திய அரசு அமைதி காப்பது நமது தார்மீக மற்றும் இராஜதந்திர வழக்கங்களை விட்டு விலகுவதற்கு சமமாகும். இது நமது குரல் மட்டுமின்றி, நமது மதிப்புகளையும் இழப்பதைப் போன்றதாகும்.

இத்தகைய மனிதாபிமான பேரழிவு ஏற்பட்டுள்ள சூழலில், இஸ்ரேல் - பாலஸ்தீனம் விவகாரத்தில் ‘இரு-நாடு’ தீர்வுக்கான இந்தியாவின் நீண்டகால மற்றும் கொள்கை ரீதியான உறுதிப்பாட்டை பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசாங்கம் கைவிட்டுவிட்டது.

இந்த விவகாரத்தில் இனிமேலும் தாமதிக்காமல் இந்தியா தெளிவாக தனது கருத்தை தெரிவிக்க வேண்டும். இஸ்ரேல் விவகாரத்தில் இந்தியா தனது பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும். மேற்கு ஆசியாவில் பதற்றத்தை தணித்து, பேச்சுவார்த்தையை ஊக்குவிக்க அனைத்து தூதரக வழிமுறைகளையும் பயன்படுத்த வேண்டும்.

கடந்த 13 ஆம் ஆண்டு, ஈரான் மற்றும் அதன் இறையாண்மைக்கு எதிராக இஸ்ரேல் சட்டவிரோதமான தாக்குதலை தொடங்கியபோது, ஒருதலைப்பட்ச இராணுவ தாக்குதலின் ஆபத்தான விளைவுகளை உலகம் மீண்டும் ஒருமுறை கண்டது. இது பிராந்திய மற்றும் உலகளாவிய அளவில் ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தும். ஈரானில் நடந்த இந்த குண்டுவெடிப்புகளையும், படுகொலைகளையும் காங்கிரஸ் கட்சி கண்டித்துள்ளது.

பொதுமக்களின் உயிர்கள் மற்றும் பிராந்திய அமைதியை முற்றிலும் புறக்கணித்து காசா மீது நடத்தப்பட்ட மிருகத்தனமான தாக்குதல்களைப் போலவே, ஈரான் மீதான தாக்குதலும் நடத்தப்பட்டுள்ளது.

பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தலைமையிலான இஸ்ரேல் அரசு அமைதியை சீர்குலைப்பதிலும், தீவிரவாதத்தை வளர்ப்பதிலும் நீண்ட வரலாற்று பதிவைக் கொண்டுள்ளது.

ஈரான் அணு ஆயுதங்களை தயாரிக்கும் நிலையில் இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கூறியமை மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கிறது. ஜம்மு - காஷ்மீர் உள்ளிட்ட முக்கியமான விவகாரங்களில் ஈரான் உறுதியான ஆதரவை இந்தியாவுக்கு வழங்கியுள்ளது. 1994 ஆம் ஆண்டு , காஷ்மீர் பிரச்சினையில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் இந்தியாவை விமர்சிக்கும் தீர்மானத்தைத் தடுக்க ஈரான் உதவியது. முன்னதாக 1965 மற்றும் 1971 ஆம் ஆண்டு போர்களில் பாகிஸ்தானுக்கு ஆதரவளித்த ஈரான் ஏகாதிபத்திய அரசை விட, தற்போதைய ஈரான் இஸ்லாமிய குடியரசு இந்தியாவுடன் நன்றாக ஒத்துழைத்து வருகிறது.

இந்தியா - இஸ்ரேல் இடையிலான இருதரப்பு உறவு, போர் பதற்றத்தை தணித்து, அமைதிக்கு வழிவகை செய்ய உதவும் தார்மீக பொறுப்பை நமக்கு வழங்குகிறது. இது சாதாரண கொள்கை மட்டுமல்ல. லட்சக்கணக்கான இந்திய மக்கள் மேற்கு ஆசியா முழுவதும் வேலை செய்கின்றனர். எனவே அந்த பிராந்தியத்தில் அமைதி நிலவுவது நமது தேச நலன் சார்ந்த விஷயமாக உள்ளது என்பதை அறிந்து கொள்ளவேண்டும்.” என்று குறிப்பிட்டுள்ளார்.



# ஈரானில் 6 விமான நிலையங்களையும் 15 போர் விமானங்களை அழித்தோம்

## இஸ்ரேல் அறிவிப்பு

ஈரானில் உள்ள 6 இராணுவ விமான நிலையங்களைத் தாக்கியதுடன், 15 போர் விமானங்கள் மற்றும் ஹெலிக்கொப்டர்களை தாக்கி அழித்ததாக இஸ்ரேல் பாதுகாப்புப் படை கூறியுள்ளது.

மேற்கு, கிழக்கு மற்றும் மத்திய ஈரானில் உள்ள ஆறு விமான நிலையங்கள் மீது வான்வழித் தாக்குதல்களை நடத்தியதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இஸ்ரேல் இராணுவம் தனது எக்ஸ் பதிவில்,

“ஈரானில் உள்ள மெராபாத், மஷாத் மற்றும் டெஸ்ஃபுல் உட்பட 6 விமான நிலையங்கள், 15 ஈரானிய விமானங்கள் மற்றும் ஹெலிகாப்டர்களை அழித்தோம். இந்தத் தாக்குதல்கள் மூலம் ஈரானில் உள்ள விமான ஓடுபாதைகள், நிலத்தடி பதுங்குகுழிகள், எரிபொருள் நிரப்பும் விமானம் மற்றும் எஃப்-14, எஃப்-5 மற்றும் ஏஹெச்-1 உள்ளிட்ட விமானங்கள் கடும் சேதமடைந்தன. இந்த விமான நிலையங்களின் இயங்கும் திறனை எங்கள் விமானப்படை சீர்குலைத்தது” எனத் தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து இஸ்ரேல் பாதுகாப்புப் படையின் அறிக்கையில்,

“ இந்த தாக்குதல்கள் இஸ்ரேல் மீதான ஈரானின் தாக்குதல்களைத் தடுக்கும் நோக்கம் கொண்டவை. இஸ்ரேலின் இராணுவ புலனாய்வு சேவையின் உளவுத்துறை வழிகாட்டுதல்களின்படி, ஈரானில் உள்ள கெர்மன்ஷா பகுதியில், இஸ்ரேல் நாட்டின் நகரங்களை தரையிலிருந்து தரைக்கு ஏவும் ஏவுகணைகள் மூலம் தாக்கும் இலக்குகளை கொண்ட பல ஏவுதளங்கள் மற்றும் சேமிப்பு தளங்கள் அழிக்கப்பட்டன. ஈரானின் இராணுவத் திறன்கள் மீதான தாக்குதல்களை இஸ்ரேல் ராணுவம் தொடர்ந்து தீவிரப்படுத்துகிறது. மேலும் இஸ்ரேலின் வான் பாது காப்பை மேம்படுத்த தொடர்ந்து பணியாற்றுவோம்.” என்று தெரிவிக் கப்பட்டது.

நேற்று ஞாயிற்றுக் கிழமை ஈரானின் மூன்று அணுசக்தி தளங்கள் மீது அமெரிக்கா வான்வழித் தாக்குதல்களை நடத்தியதைத் தொடர்ந்து, டெல் அவிவ் மற்றும் ஹைஃபா போன்ற முக்கிய இஸ்ரேல் நகரங்களை குறிவைத்து ஈரான் ஏவுகணைத் தாக்குதலை நடத்தி வரும் நிலையில், இஸ்ரேல் இத்தகைய தாக்குதலை மேற்கொண்டுள்ளது.









# அமெரிக்க தாக்குதலால் ஈரான் ஆவேசம்: இஸ்ரேலை நோக்கி பாயும் ஏவுணைகள்

இஸ்ரேலுக்கு ஆதரவாக தங்கள் நாட்டின் மீது தாக்குதல் நடத்திய அமெரிக்கா மீதான கடும் கோபத்தில் உள்ள ஈரான் பல்வேறு புதிய வியூகங்களை வகுத்துள்ளது.

இதனிடையே, ஆவேசத்தின் உச்சமாக, இஸ்ரேல் நகரங்கள் மீது சக்தி வாய்ந்த ஏவுகணைகளை வீசி கடும் தாக்குதல் நடத்தி வருகிறது ஈரான்.

அணு ஆயுத தயாரிப்பில் தீவிரமாக உள்ளது என கூறி ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. இதற்கு ஈரான் கடுமையாக பதிலடி தந்து வந்ததால் இரு நாடுகளுக்கும் இடையே போர் தீவிரம் அடைந்தது. இந்த நிலையில், ஈரான் நாட்டின் 3 முக்கிய அணுசக்தி தளங்களை அமெரிக்கா குண்டு வீசி அழித்தது, இந்தப் போரை அடுத்தக் கட்டத்துக்கு நகர்த்தியுள்ளது.

‘ஒபரேஷன் மிட்நைட் ஹேமர்’ என்ற பெயரில் ஈரான் அணுசக்தி திட்டத்தை நாசமாக்கிவிட்டதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

“ஈரானின் அணுசக்தி செறிவூட்டல் மையமான நடான்ஸ், இஸ்பஹான் மற்றும் ஃபர்தோ ஆகிய இடங்களை குறிவைத்து தாக்கினோம். இந்த ஒருங்கிணைந்த தாக்குதலில் பி-2 குண்டுவீச்சு விமானங்கள் உட்பட 125 இற்கும் மேற்பட்ட போர் விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டன. பாறையில் ஊடுருவி தாக்கும் 14 ஜி.பி.ஐ. 57 குண்டுகள் மற்றும் பெர்சியன் வளைகுடா மற்றும் அரபிக் கடலில் இருந்த நீர்மூழ்கி கப்பல்களில் இருந்து வீசப்பட்ட 30 டொமஹாக் ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டன.

இதுபோன்ற தாக்குதலை இதுவரை எந்த நாடும் நடத்தியதில்லை. பி2 குண்டு வீச்சு விமானங்கள் ரேடாரில் சிக்காமல் ஈரான் வான் எல்லைக்குள் புகுந்து, தாக்குதல் நடத்திவிட்டு திரும்பியது. நாங்கள் ஈரான் இராணுவ வீரர்களையோ, பொதுமக்களையே குறிவைக்கவில்லை. இந்த திட்டம் ஈரான் ஆட்சி மாற்றத்துக்கானது அல்ல. அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புக்கு ஏற்பட்ட அச்சுறுத்தலை முறியடித்துள்ளோம்’ என்று அமெரிக்கா பாதுகாப்புத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெள்ளை மாளிகையில் இருந்து நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில்,

“ஈரானின் முக்கிய அணுசக்தி செறிவூட்டல் மையங்களை முற்றிலுமாக அழிக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கை அமெரிக்க இராணுவத்தின் மிகப் பெரிய வெற்றி. அமைதி நிலவ வேண்டும், இல்லை என்றால் சோகம் தான் ஏற்படும்” என்று ஈரானை அவர் மீண்டும் எச்சரித்தார்.





# அமெரிக்க தாக்குதலுக்குப் பின் இஸ்ரேல் மீது மிகப் பெரிய ஏவுகணைகளை வீசுகிறது ஈரான்

அமெரிக்க தாக்குதலுக்குப்பின் இஸ்ரேல் மீது கொராம்ஷர் - 4 என்ற மிகப் பெரிய ஏவுகணைகள் மூலம் ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் 1,500 கிலோ வெடிபொருள் இருப்பதால், இஸ்ரேலில் உள்ள கட்டடங்கள் மிகப் பெரியளவில் சேதம் அடைந்து வருகின்றன.

ஈரானில் உள்ள 3 முக்கிய அணு சக்தி தளங்கள் மீது அமெரிக்க நேற்று அதிகாலை குண்டு வீசியது. இதனால் கோபம் அடைந்துள்ள ஈரான் இஸ்ரேல் மீது, மிகப் பெரிய ஏவுகணையான கொராம்ஷர்-4 மூலம் தாக்குதல் நடத்தி வருகிறது. 2,000 கி.மீ தூரம் சென்று தாக்கும் இந்த ஏவுகணையில் 1,500 கிலோ வெடிபொருள் உள்ளது. இதனால் இது இஸ்ரேலில் உள்ள கட்டிடங்களில் அதிகளவில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க தாக்குதலுக்குப்பின் கொராம்ஷர்-4 உட்பட 40 ஏவுகணைகளை இஸ்ரேல் மீது ஈரான் நேற்று வீசியது. டெல் அவிவ் நகரில் உள்ள வணிக வளாகம், வங்கி உட்பட பல கட்டடங்கள் இந்த தாக்குதலில் சேதம் அடைந்தன. இதில் 11 பேர் காயம் அடைந்தனர். சேதம் அடைந்த பகுதிகளில் இஸ்ரேல் மீட்பு குழுவிவர் மீட்பு பணிகளில் ஈடுபட்டு வருகின் றனர்.

இதனிடையே, ஈரானின் ஃபோர்டோ, நடான்ஸ் மற்றும் இஸ்பஹான் அணுசக்தி நிலையங்கள் மீதான அமெரிக்க வான்வழித் தாக்குதலை தொடர்ந்து மேற்கு ஆசியாவில் உள்ள ஒவ்வொரு அமெரிக்க குடிமகனும் அல்லது இராணுவ வீரர்களும் இப்போது ஈரானின் இலக்காக மாறியுள்ளனர் என ஈரான் அரசு தொலைக்காட்சி எச்சரித்துள்ளது.

இது குறித்து ஈரான் மதகுரு கொமேனியின் நெருங்கிய உதவியாளர் ஹொசைன் ஷரியத்மதர் கூறுகையில்,

"ஈரானின் அணுசக்தி தளங்கள் மீது அமெரிக்க அத்துமீறி தாக்ககுதல் நடத்தியுள்ளது. இதையடுத்து, சிறிதும் தாமதிக்காமல் உடனடியாக எதிர்த் தாக்குதல் நடத்த வியூகம் வகுக்கப் பட்டுள்ளது.

அதன்படி மத்திய கிழக்கில் உள்ள முக்கிய அமெரிக்க இராணுவத் தளங்களை ஈரான் குறிவைத்துள்ளது. பஹ்ரைனில் உள்ள அமெரிக்க கடற்படையை தாக்கவும், பிரிட்டிஷ், ஜெர்மன், பிரெஞ்சு மற்றும் அமெரிக்க கப்பல்களுக்கு ஹோர்முஸ் ஜலசந்தியை மூடவும் ஈரானிய படைகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது." என்று தெரிவித்துள்ளார்.



## அமெரிக்க தாக்குதல் எதிரொலி:

# ரஷ்யாவுக்கு இன்று செல்கிறார் ஈரான் வெளியுறவு அமைச்சர்

ஈரானின் அணு நிலையங்கள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியதை அடுத்து ரஷ்ய ஜனாதிபதியுடன் முக்கிய பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்காக ஈரான் வெளியுறவு அமைச்சர் இன்று திங்கள் கிழமை ரஷ்யா செல்லவுள்ளார்.

நேற்று அதிகாலை, அமெரிக்க இராணுவம் ஈரானின் ஃபோர்டோ, இஸ்ஃபஹான், நடான்ஸ் ஆகிய அணுசக்தி தளங்கள் மீது தாக்குதல் நடத்தியதாக ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்திருந்தார். இது சர்வதேச சட்டத்தை மீறிய செயல் என ஈரான் அணுசக்தி கழகம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து பதிலடியாக இஸ்ரேல் மீது சரமாரியான ஏவு கணை தாக்குதலை ஈரான் நடத்தியது. இந்த தாக்குதலில் 86 பேர் காயமடைந்துள்ளனர் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் செய்யத் அப்பாஸ் அரக்சி, அவசர அவசரமாக ரஷ்யா செல்லவுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

இஸ்தான்புல்லில் செய்தியாளர்களை சந்தித்த அவர்,

“ ரஷ்ய ஜனாதிபதி புடினை சந்தித்து ஆலோசனை நடத்தவுள்ளேன். ரஷ்யாவுடன் இணைந்து செயல்படுவோம்.” என்று தெரிவித்தார்.

இந்தப் போர் பதற்றம் மத்திய கிழக்கு அரசியலில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.



# அவசரமாக கூடியது ஐ.நா பாதுகாப்பு சபை

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் அவசர ஒன்றுகூடல் இடம் பெற்றுள்ளது.

இதில் ரஷ்யா, சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் மத்திய கிழக்கில் உடனடி மற்றும் நிபந்தனையற்ற போர்நிறுத்தம் வேண்டும் என்ற தீர்மானத்தை சமர்ப்பித்துள்ளன.

இதன்போது ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மீதான தாக்குதலுக்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை கண்டனம் தெரிவித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கனடா முரசு

திங்கட்கிழமை | 23/06/2025

## டொரொண்டோவில் கத்தி குத்து தாக்குதல்

**ஒருவர் படுகாயம்**

கனடாவின் டொரொண்டோ ரீஜென்ட் பார்க் Regent Park பகுதியில் உள்ள ஒரு குடியிருப்பு கட்டடத்தில் சனிக்கிழமை மாலை ஏற்பட்ட கத்தி 02





# கனடா முழுவதும் உணர்வுபூர்வமான பழங்குடியின மக்கள் நாள் நிகழ்வுகள்

**கனடா முழுவதும் பழங்குடியின மக்கள் நாள் நிகழ்வுகள் மகிழ்ச்சியுடனும், உணர்வு பூர்வமாகவும் கடைப்பிடிக்கப் பட்டது.**

**பல்வேறு நகரங்களில் நடைபெற்ற விழாக்களில் நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றனர். விழாவின் ஒருபுறம் மகிழ்ச்சி, கலாச்சார கொண்டாட்டமாக இருந்தாலும், மறுபுறம் பூர்வீக மக்களின் உரிமைகள் மீதான கவலைகளும் தொடர்ந்து பேசப்பட்டன.**

டொரண்டோவின் பொர்ட் யோர்க் Fort York தேசிய வரலாற்று நினைவிடத்தில் நடைபெற்ற நா மீ ரெஸ் Na-Me-Res பாரம்பரிய பொவ் Powwow மற்றும் பழங்குடியின Indigenous கலை விழாவில் பல்லாயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

நகர மேயரான ஒலிவியா செள, இந்த நிகழ்வுகளில் பங்கேற்றிருந்தார். டொரொண்டோ, வான்கூவர், ஒட்டாவா, மானிடோபா உள்ளிட்ட பல இடங்களில் பழங்குடியின மக்கள் நாள் கொண்டாட்டங்கள் நடைபெற்றன.

இதேவேளை, பூர்வீக சமூகங்களுடன் முழுமையாக கூட்டாண்மை நடைமுறைப்படுத்தும் நோக்குடன் நாம் செயல்படுகிறோம் என பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.

கல்வி, சுகாதாரம், வாழ்வாதாரம், காலநிலை மாற்றம் போன்ற துறைகளில் பூர்வீக மக்களின் பங்களிப்பு முக்கியம் என கூறினார்.





# டொரொண்டோவில் பாரியளவில் மோசடி

கனடாவின் டொரொண்டோவில் பாரிய அளவிலான ‘டாக்சி மோசடி’ குறித்த தகவல்கள் அம்பலப்படுத்தப் பட்டுள்ளன.

டொரொண்டோ நகரத்தில் ‘டாக்சி மோசடி’ எனப்படும் பெரிய அளவிலான நிதி மோசடியில் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் கடந்த பத்து மாதங்களாக விசாரணை நடத்தப்பட்டுள்ளதாகவும், இந்த விசாரணைகளுக்கு புரொஜெக்ட் பெயார் Project Fare எனப் பெயரிடப்பட்டிருந்தது.

இந்த குழுவினர் சட்டவிரோதமாக டாக்சி ஓட்டுநர்களாக நடித்து பயணிகளிடம் கிரெடிட் அல்லது டெபிட் கார்டில் பணம் செலுத்தும்படி கூறி, பணப்பரிவர்த்தனை நேரத்தில் பயணியின் கார்டை தனது கார்டுடன் மாறாக பரிமாறியுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

அதன் பின்னர் மேற்படி அட்டைகளை பயன்படுத்தி மோசடி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் ஐந்து லட்சம் டொலர்கள் வரையில் இந்த கும்பலினால் மோசடி செய்யப்பட்டுள்ளதாகவும், சந்தேக நபர்கள் 108 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபர்களிடமிருந்து டெபிட் மற்றும் கிரெடிட் அட்டை இயந்திரங்கள், தங்க ஆபரணங்கள் உள்ளிட்ட பல்வேறு பொருள்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.






# காலிஸ்தான் செயல்பாட்டை ஒப்புக்கொண்டது கனடா

காலிஸ்தானி தீவிரவாதிகள் இந்தியாவை முதன்மையாக குறிவைத்து வன்முறைச் செயல்களை ஊக்குவிப்பதற்கும், நிதி திரட்டுவதற்கும் மற்றும் திட்டமிடுவதற்கும் கனேடிய மண்ணை ஒரு தளமாக தொடர்ந்து பயன்படுத்தி வருவதாக கனடான முதல் முறையாக அதிகாரப்பூர்வமாக ஒப்புக் கொண்டுள்ளது.

கனடாவின் உயர்மட்ட புலனாய்வு அமைப்பான கனேடிய பாதுகாப்பு புலனாய்வு சேவையின் (CSIS) அண்மைய வருடாந்திர அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த வெளிப்பாடு, இந்தியாவுடனான அதன் உணர்திறன் மிக்க இராஜதந்திர உறவின் பின்னணியில் கனடாவிற்குள் வெளிநாட்டு தலையீடு மற்றும் தீவிரவாத நடவடிக்கைகள் குறித்த கவலைகளை மீண்டும் தூண்டியுள்ளது.

பல ஆண்டுகளாக இந்தியா கனேடிய மண்ணில் இருந்து செயல்படும் காலிஸ்தான் தீவிரவாதிகள் குறித்து கவலைகளை எழுப்பி வருகிறது.

ஆனால் கனடா பெரும்பாலும் இந்த பிரச்சினையை கண்டுகொள்ளாமல் இருந்தது. இந்த நிலையில் கனடாவின் சொந்த உளவுத்துறை பாதுகாப்பு அமைப்பு, புது டெல்லி நீண்டகாலமாக முன்வைத்து வந்த குற்றச்சாட்டினை ஒப்புக் கொண்டுள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் அவரது கனேடியப் பிரதமர் மார்க் கார்னியும் கனடாவில் நடந்த ஜி 7 உச்சிமாநாட்டில் முதன்முறையாக நேரில் சந்தித்ததன் பின்னர் கனேடிய பாதுகாப்பு புலனாய்வு சேவையின் இந்த வெளிப்பாடுகள் வந்துள்ளன.

2023 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் கொலம்பியாவில் காலிஸ்தான் ஆதரவு பிரிவினைவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து மோசமடைந்திருந்த விரிசல் அடைந்த இராஜதந்திர உறவுகளை சரிசெய்வதில் அவர்களின் சந்திப்பு ஒரு முக்கியமான படியைக் குறித்தது.

1985 ஆம் ஆண்டு ஏர் இந்தியா குண்டுவெடிப்பு மற்றும் அதைத் தொடர்ந்து இந்தியாவில் நடந்த பயங்கரவாத நடவடிக்கைகளுக்குப் பின்னர், பிரிவினைவாத காலிஸ்தான் இயக்கம் இந்தியாவின் கவலையின் ஒரு குறிப்பிட்ட மையமாக உள்ளது.

2023 ஆம் ஆண்டு கனேடிய குடிமகன் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டது தொடர்பான கனடா அரசாங்கத்தின் விசாரணை 2024 ஆம் ஆண்டும் தொடர்ந்தது.

நிஜ்ஜாரின் கொலை தொடர்பாக மே 2024 இல் நான்கு நபர்கள் கைது செய்யப்பட்டு முதல் நிலை கொலை மற்றும் கொலை செய்ய சதி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டனர்.

## டொரொண்டோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யகுத்து சம்பவத்தில் ஒருவர் பலத்த காயங்களுடன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

பார்லிமெண்ட் வீதிக்கு கிழக்கே உள்ள ஸாக்வில்லே மற்றும் டண்டாஸ் வீதிகள் சந்திப்பில் உள்ள ஒரு கட்டடத்தில் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டதாக மாலை 7 மணியளவில் தகவல் வழங்கப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பாதுகாப்புப் படையினர் சம்பவ இடத்திற்கு வந்தபோது, ஒருவர் கத்தியால் குத்தப்பட்டு, காயமடைந்த நிலையில் இருந்ததை அவதானித்துள்ளனர்.

அந்த நபர் தீவிரமான ஆனால் உயிருக்கு ஆபத்தில்லாத காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என டொரொண்டோ மருத்துவ உதவிப்பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.




ஒரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதோடு, அவரும் சிறிய காயங்களுடன் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கத்தியகுத்து சம்பவம் எதனால் ஏற்பட்டது என்பது தொடர் பான தகவல்கள் இதுவரை வெளியிடப்படவில்லை. பொலிஸார் விசாரணையை தொடர்ந்து நடத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.




# ஐ.சி.சி. 2026 டி20 உலகக் கிண்ணத்துக்கு கனடா கிரிக்கெட் அணி தகுதி பெற்றது

கனடாவின் கிங் சிட்டியில் நடந்த அமெரிக்க தகுதிச் சுற்றில் பஹாமாஸை 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியதன் மூலம் கனடா ஆடவர் ஐ.சி.சி. டி20 உலகக் கிண்ண 2026 இற்கு அதிகாரப்பூர்வமாக தகுதி பெற்றுள்ளது.

தொடர்ச்சியாக ஐந்து வெற்றிகளுடன் கனடா தோல்வியே இல்லாமல் தகுதிச் சுற்றை நிறைவு செய்து, இந்தியா மற்றும் இலங்கை இணைந்து நடத்தும் 2026 டி 20 உலகக்கோப்பையில் பங்கேற்பதற்காக இடத்தை உறுதி செய்துள்ளது.

முன்னதாக, பஹாமாஸிற்கு எதிராக முதலில் பந்து வீசத் தேர்வுசெய்த கனடாவின் பந்துவீச்சாளர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

பஹாமாஸை 19.5 ஓவர்களில் வெறும் 57 ஓட்டங்களில் ஆட்டமிழக்கச் செய்தனர். கலீம் சனா மற்றும் சிவம் சர்மா தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.







